# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்:100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

************

மனு எண்: 724/2017/ஊராட்சி

ஆணை எண்: 134/2017

நாள்: 25/05/2017

த. பாலசுப்ரமணியன்,
வெம்பக்கோட்டை ஒன்றியம்,
(இ) 26-கலைவாணர் நகர் 2ம் தெரு,
விருதுநகர் டவுன் - 626 001. – மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம்,
காரியாபட்டி. – எதிர் மனுதாரர்

## ஆணை

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் டவுன், நெம்பர் 26, கலைவாணர் நகர், 2-ம் தெருவில் வசிக்கும் திரு. த. பாலசுப்ரமணியன், அவரது 20.5.2017 நாளிட்ட மனுவில் காரியாபட்டி ஒன்றியம், பந்தேனந்தல் ஊராட்சி நமச்சிவாயபுரத்தில் 2009-10ம் ஆண்டுக்குரிய அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட ஆதி-திராவிடர் மயானகொட்டகை மற்றும் சிமெண்ட் சாலை, சுற்று சுவர் கட்டும் வேலைக்கு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வேலையை செய்து முடித்த ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியது தவறாகும் என்றும், அதனால் பட்டியல் தொகை ரூ.1,61,850/- தணிக்கைக்கு உட்படுத்துகிறது எனவும், உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று நிர்வாக ரீதியாக ஆய்வு செய்து முடிவு தணிக்கைக்கு தெரிவிக்கப்பட வேண்டுமெனவும், தணிக்கை ஆட்சேபணம் மூலம் தடை ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு உடனடியாக உயர் அதிகாரிகளின் வாய்மொழி உத்திரவிற்கிணங்கி கிழ்ப்படிந்து deposit

amount ஆக ரூ.1,61,850/- 27.5.2011ந் தேதி AGAMT Deposit Register கணக்கில் அவர் செலுத்தியதாகவும், அந்த டெபாசிட் பணத்தை 6 வருடங்கள் கடந்த நிலையில் திரும்ப வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு பந்தனேந்தல் ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
29.5.17

29.5.17
29.5.17

பெறுநர்
த. பாலசுப்ரமணியன்,
26-கலைஞானர் நகர் 2ம் தெரு,
விருதுநகர் டவுன் - 626 001,
விருதுநகர் மாவட்டம்.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர்.